ராணி
காமிக்ஸ்
முகமூடிவீரர் மாயாவி தோன்றும்
நள்ளிரவுக்
கொள்ளை
ரு
2

ராணி காமிக்ஸ்–210
(மாதம் இருமுறை இதழ்)
KK
மார்ச் 16–31
1993

முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்

நள்ளிரவுக் கொள்ளை

நான்கு ஆண்டுக்கு ஒருமுறை ஒலிம்பிக் போட்டி நடப்பது போல காட்டிலும் ஒலிம்பிக் போட்டி நடந்தது. மாயாவி முன்நின்று போட்டியை நடத்தி வைத்தார். காட்டில் உள்ள எல்லா கிராமத்தவர்களும் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டார்கள்.

ஓட்டப்பந்தயம் முதல் அனைத்து விளையாட்டுகளும் போட்டியல் இடம் பெற்றன.
நீளம் தாண்டுதல் போட்டி உயிரைப் பணையம் வைத்து ஆடக்கூடியது.
நெருப்புத்துண்டங்களைப் பரப்பி வைதது அதைத் தாண்ட வேண்டும் கொஞ்சம் தவறினால் நெருப்பில் விழ வேண்டியது தான்.
அதே போலத்தான் உயரம் தாண்டுதலும். பனைமர உயரத்திற்கு எறியும் நெருப்பைத் தாண்ட வேண்டும்.
எந்த கிராமத்தினர் அதிக இடத்தைப் பிடிக்கிறார்களோ அவர்களுக்கு மாயாவியின் தங்கக்கோப்பை பரிசு கொடுக்கப் படும்.
சிறையில் இருக்கும் மைக் என்பவன் உல்லாச வாழ்க்கையை நினைத்துக் கனவு கண்டு கொண்டிருந் தான்.
காட்டுவாசி ஓமன் என்பவன் மாயாவியின் தங்கக்கோப்பையை நினைத்துக் கொண்டிருந்தான்.
கோடி ரூபாய் பெறுமே!

மறுநாள்— மைக்கும் ஓமனும் சந்தித்தார்கள்.
காட்டில் ஒலிம்பிக் போட்டியா?
ஆமாம்! வெற்றி பெற்றவர்களுக்கு மாயாவியின் தங்கக் கோப்பை பரிசு கொடுக்கப் படும்!
தங்கக்கோப்பையில் வைரம், வைடூரியம், மாணிக்கம், கோமேதகம்.
முத்து பவளம் என்று நவரத் தினங்களாக நிறைந்திருக்கும்.
மொத்தத்தில் தங்கக்கோப்பை கோடி ரூபாய் பெறும்!
உண்மை யாகவா?
ஆமாம்! அதுமட்டும் கிடைத்தால் நாம் பெரிய ஆளாகிவிடலாம்!
கவலைப்படாதே! அதற்கு ஏற்பாடு செய்கிறேன்!
மறுநாள்— மைக்கை சந்திக்க வெளியில் இருந்து நண்பன் ஒருவன் வந்தான்.
கோப்பையை விடக்கூடாது!
நேரம் முடிந்துவிட்டது. போகலாம்!
என் நண்பனிடம் தங்கக்கோப்பையைப் பற்றி சொல்லிவிட்டேன்!
இனி நாம் தப்பிக்க வேண்டியதுதான்!
முடியுமா?

முடியும்! அப்பொழுதுதான் தங்கக்கோப்பையை கொள்ளையடிக்க முடியும்!
தங்கக்கோப்பை உண்மைதானே!
என் நம்பிக்கை இல்லையா?
மைக் அன்று இரவே தன் திட்டத்தை செயல்படுத்தினான்.
என்னுடன் இருப்பவன் சாகக் கிடக்கிறான்!
அப்படியா?
உடனே காவலாளிகள் இருவர் சிறைக்குள் வந்தார்கள்.
ஏய்...! சத்தம் போட்டால் உயிர் போய் விடும்!
துப்பாக்கி எப்படி வந்தது!
அதெல்லாம் உனக்கு எதற்கு?
மைக்கும், ஓமனும் காவலாளிகளை சிறைக்குள் அடைத்து விட்டு தப்பி னார் கள்.
வெளியே அவர்களுக்குக் கார் தயாராக இருந்தது. அதில் ஏறித் தப்பினார்கள்.
இந்த கொள்ளையை வெற்றியுடன் முடித்தால் கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்க லாம்!

மைக் ஓமனை தலைவனிடம் கூட்டிச் சென்றான்.
பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.
யாரும் உங்களை பின்தொடர்ந்து வர வில்லையே!
இல்லை!
சரி! தங்கக் கோப்பையை எடுக்க விமானத்தில் செல்கிறீர்களா? காரில் போகிறீர்களா?
கோப்பை எங்கே இருக்கிறது?
5 ஆயிரம் மைல்களைத் தாண்டிக் காட்டில் இருக்கிறது!
காட்டிலா! முட்டாள் இதை ஏன் முதலில் சொல்லவில்லை!
கோப்பை எங்கே இருந்தால் நமக்கென்ன?
அப்படியானால் விமானத்திலேயே செல்லுங்கள்!
ஆபத்தான இடம். அங்கே மனிதர்கள் விஷ அம்புடன் சுற்றீத்திரிவார்கள். மாயாவி வேறு இருப்பார்! விமானத்தில் சென்றால் தெரிந்து விடும்!

மைக்! இதையெல்லாம் நீ ஏன் என்னிடம் சொல்லவில்லை:
இவ்வளவு சிக்கல் இருப்பது இப்போதுதான் எனக்கே தெரிகிறது!
சரி காட்டுக்குள் நடந்தே சென்று கோப்பையைக் கொண்டு வாருங்கள்!
கொள்ளையர்கள் துறைமுகத்துக்கு வந்தார்கள்.
போலீசார் உங்களைத் தேடிக் கொண்டிருப்பார்கள்! எச்சரிக்கை!
ஓ.கே. பாஸ்!
நான் உங்களை மாரீஸ் டவுனில் சந்திக்கிறேன்!
ஆகட்டும்!
கப்பல் புறப்பட்டது.
ஓமன்! கோப்பையை நினைத்து கனவு கண்டுகொண் டிருக்கிறேன்!
!!
கோப்பை
மறுபடியும்

கப்பல் பெங்கால்லியா வந்ததும், மைக்கும் ஓமனும் சிறிய படகில் கரைக்கு வந்தார்கள்.
சிறையில் இருந்து தப்பிய இரண்டு கைதிகள் கப்பல் மூலமாகத் தப்பிச் செல்கிறார்கள் என்று கருதப் படுகிறது.
ஏய்...! நம்மைப் பற்றித்தான் சொல்கிறார்கள்!
ரேடியோவில் செய்தி வாசித்தார்கள்.
ஏய்...! ஓமன் என்ன இது?
நீயும் காட்டுவாசியாக மாறவேண்டாமா?
வெள்ளையனான மைக் காட்டுவாசியாக மாற கறுப்பு மை பூசிக்கொண்டான்.
ஏய்...! ஆளே அடையாளம் தெரிய வில்லை!
இப்போது நாம் காட்டுவாசிகளுடன் எளிதில் கலந்து விடலாம்!
உடனே ஓமன், மைக்கை தன் கிராமத்திற்கு அழைத்துப் போனான்.
அவர்கள் என்ன செய் கிறார்கள்!
ஒலிம்பிக் போட்டி யில் வெற்றி பெறுவதற்காக பயிற்சி செய்கி றார்கள்!
ஓமன் கிராமத்து தலைவனை சந்தித்தான்.
ஓமன்! இவ்வளவு நாளும் எங்கே போயிருந்தாய்!
வெளிநாடு சென்றிருந்தேன்!

உன் விருந்தாளியையும் உன்னுடனே தங்கிக் கொள்ளச் சொல்!
ரொம்ப நன்றி!
மாயாவியின் தங்கக்கோப்பை யாரிடம் இருக்கிறது.
போனமுறை வாம்பசி கிராமத்தினர் தட்டிச் சென்று விட்டார்கள்! அது எப்படி உனக்கு?
ஒலிம்பிக் போட்டியைப் பற்றி சொன்னேன். அதான் பார்க்க ஆசைப்படுகிறான்!
இருவரும் வாம்பசி கிராமத்திற்கு புறப் பட்டார்கள்.
ஓமன்! எனக் கென்னவோ இதில் நம்பிக்கை இல்லை!
இதுதான் வாம்பசி கிராமம்! பெரிய கிராமம்.
அதோ அங்கேதான் கோப்பை இருக்கிறது!
அடுத்தது இளங்கோ கிராமம். இருவரில் ஒருவருக்குத்தான் தங்கக்கோப்பை கிடைக்கும்!
இதோ அதுதான் மாயாவியின் கோப்பை.
ஆகா! என்ன அழகு. உண்மையிலேயே இது கோடி ரூபாய் பெறும்!

வைரம், வைடூரியம், கோமேதகம் எல்லாம் கண்களைப் பறிக்கின்றதே!
இப்போதாவது நம்புகிறாயா?
கேட்பாரற்று கிடக்கிறது! திருடு போய் விடாதா?
மைக்! எல்லாரும் நம்மை பார்க்கிறார்கள். வா கழன்று கொள்ளலாம்!
இதோ இதுதான் கோப்பைக்கு பாதுகாப்பு
இதுவா?
அப்போது— மாயாவியும் ரெக்சும் வாம்பசி கிராமத்திற்கு வந்தார்கள்.
மாம்மா! ஒலிம்பிச் போட்டி எப்போது நடக்கும்!
விரைவில் நடக்க இருக்கிறது ரெக்ஸ்!
இந்த முத்திரை ஏதாவது துப்பறியும் ஏஜன்சிக்கு சொந்தமானதா?
இல்லை!
அப்படியானால்....!
வா! நடந்துகொண்டே சொல்கிறேன்!

வாம்பசி கிராமத்தினர் மாயாவியைக் கண்டதும ஆரவாரம் செய்தனர்.
மாயாவி வாழ்க!
மாயாவி வாழ்க!!
வணக்கம் தலைவரே!
தங்கக்கோப்பையை நான்கு ஆண்டுகள் பத்திரமாக பாதுகாத்து வந்திருக் கிறீர்கள்!
KK
மாயாவியாரே! அடுத்த நானகு ஆண்டும் தங்கக் கோப்பை எங்களிடம்தான் இருக்கப் போகிறது!
ஆமாம்! ஆமாம்!
பரவாயில்லையே' இந்த முறையும் வெற்றி பெற கடுமையாக உழைத் திருக்கிறீர்கள்!
நீங்களே எங்கள் திறமையை வந்து பாருங்கள்!
நான் சிறுவனாக. இருநதபொழுது இவரை பார்த்திருக்கிறேன்!
ஓமன்! யார் இந்த முகமூடி?

அதோ நிற்கிறார்களே அவர்கள் யார்?
இப்பொழுதே கேட்டுவிடுகிறேன்!
மாயாவி அவாகள் இருவரையும் பற்றி விசாரித்தார்.
என் பெயர் ஓமன். ஒகான் கிராமத் தலைவரின் நெருங்கிய உறவினன்!
அவர்கள் ஒகான் கிராமத் தலைவரின் உறவினராம்!
சரி! விளையாட்டு பயிற்சி எங்கே நடக்கிறது!
அவர்தான் மாயாவி! இந்தக் காட்டுக்கு ராஜா! அவருக்கு சாவு என்பதே கிடையாது!
வா பார்க்கலாம்!
மாயாவி உயரம் தாண்டுதல் பயிற்சி நடக்கும் இடத்திற்கு வந்தார்.
உடம்பை வளைக்க வேண்டும்! இதோ பார! இப்படிச் செய்ய வேண்டும்!
மாயாவி தவறைத் திருத்தினார்.

ஓமன்! இங்குதான் ஆள் இல்லையே! கோப்பையை தூக்கிக்கொண்டு ஓடி விட்டால் என்ன?
மாயாவி இருக்கிறார்! விளையாடுகிறாயா?
பாஸ் நமக்காக மாரீஸ் டவுனில் காத்திருப்பார். மாயாவி இருக்கும்வரை கோப்பையை திருட முடியாதா?
அவசரப்படாதே அதற்கு நேரம் வரும்!
பரவாயில்லை! போட்டியில் நெருப்புக்குள் விழுந்துவிட்டால் என்ன செய்வது?
ஆமாம் மாயாவி!
மாமா போட்டியின்போது ஏன் நெருபபை தாண்டச் சொல்கிறீர்கள்!
காட்டிலிருப்பவர்கள் பலசாலிகள். தைரிய சாலிகள் என்பதை நிரூபிக்க வேண்டாமா?
ஓமன்! இன்று இரவு கோப்பையை அபேஸ் செய்துவிட வேண்டியதுதான்!
இன்றா? வேண்டாம்! இரவில் சூழ்நிலை எப்படி இருக்கிறது என்று முதலில் நோட்டம்விட வேண்டும்!

காட்டு எல்லையில் இருந்த நகரங்கள் எல்லாம் திடீரென்று தூங்கி வழிய ஆரம்பித்தன.
மாரீஸ் டவுனில் கொள்ளையர் தலைவன் முகாமிட்டிருந்தான்.
ஒரு பாக்கெட் சிகரெட்டு வேண்டும்!
மன்னிக்கவும்! இரண்டு வாரத்திற்கு கடை விடுமுறை!
சலூனில்—
ஏய்... சவரத்தை முடித்துவிட்டுப் போ!
இரண்டு வாரம் பொறுத்து வாருங்கள்!
பொருட்களை அப்படி அப்படியே போட்டு விட்டு மக்கள் விரைந்தார்கள்.
அனைவரும் எங்கே செல் கிறார்கள்.
தெரிய வில்லையே! இரண்டு வாரம் கழித்து வருவதாக சொல்கிறார்கள்!
நகரமக்கள் காட்டுக்கு வந்தார்கள் காட்டு எல்லைக்கு வந்ததும் காரை நிறுத் திவிட்டு நடந்து சென்றார்கள்.

இந்தத் தடவை கோப்பையை யார் தட்டிச் செல்லப் போகிறார் களோ?
வாம்பசிதான்! இதில் சந்தேகம் என்ன?
காட்டுக்குள் ஒலிம்பிக் போட்டி நடக்கும் மைதானம் களை' கட்டியிருந்தது.
ஒலிம்பிக் போட்டியை காண நகர மக்கள் ஏராளமான பேர் கூடியிருந்தார்கள்.
ஒலிம்பிக் போட்டியின் சின்னமாக மாயாவியின் முத்திரை இடம் பெற்றிருந்தது.
போட்டி தொடங்குவதற்கு முன்பு மாயாவி குதிரையில் ஒருமுறை மைதானத்தை சுற்றி வந்தார்.
மாயாவி!
மாயாவி!
மைக்...! அந்த முகமூடி என்ன சொல்கிறான்!
உஷ்...! கத்திப் பேசாதே!

75-வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை காணவந்த உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி! போட்டி தொடங்க போகிறது!
முதலில் ஓட்டப்பந்தயம நடந்தது.
அதுவும் வித்தியாசமான ஓட்டப்பந்தயம். முட்செடிகளை தாவி தாவி ஓட வேண்டும்.
விளையாட்டு புதுமையாகத்தான் இருக்கிறது!
கர்ணம் தப்பினால் மரணம்தான்!
அடுத்து நீளம் தாண்டுதல். கீழே தகித்துக் கொண்டிருக்கும் நெருப்புத தனலை தாண்டவேண்டும்.
அடுத்து சிலம்பாட்டம.

அடுத்தாக புலியை
வேட்டையாட வேண்டும்.
அடுத்து எலியை பிடிக்க வேண்டும்.
இது எவ்வளவு பெரிய வேட்டை!
ஆகா! வசமாக மாட்டிக் கொண்டது
அதைவிட கொடியது. பாம்பு சீறிக்கொண் டிருக்கும். நடுவில் மல்யுத்தம்
எல்லா போட்டிகளிலும் வெற்றி பெற்ற கிராமத்திற்கு மாயாவியின் தங்கக்கோப்பை பரிசளிக்கப் படும்.
பாஸ்! என்னுடைய செய்திக்காக காத்துக் கொண்டிருப்பார்!
சீக்கிரம் முடித்து விடலாம்!
டவுனில்-
ஒரு தகவலும் இல்லை! நாம்தான் போக வேண்டும் போலிருக் கிறது!
பாஸ்! நாளை ஒரு நாள் பார்க் கலாம்!

அன்றைய விளையாட்டு முடிந்ததும், அனைவரும் அங்கேயே ஓய்வு எடுத்தார்கள்.
ஆனால் சிலர் தூங்கவில்லை.
ஓமன்! இங்கு நம்மைத் தவிர வேறு யாரும் இல்லை!
வேலையை தொடங்கலாமா?
மைக்! அங்கே பார்!
ஒருவன் கள் குடித்துக் கொண்டிருந்தான்.
ஏய்... நீ தடை ஓட்டக்காரன் தானே! எங்கே இரண்டு அடி முன்னே எடுத்துவை பார்க்கலாம்!
என்னை கோழை என்று நினைத்தாயா?
குடிகாரன் இரண்டு அடி எடுத்து கோப்பை அருகே சென்றபோது அவனை நோக்கி சரமாரியாக ஈட்டிகள் பாய்ந்து வந்தன.
ஈட்டிகள் அவனை சுற்றி வளைத்தன. அவனால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை!
ஆ...!
நான் தவறான எண்ணத்தில் கோப்பையை நெருங்கவில்லை!
ஏய்...! விடாதே!

என்ன மாமா கூச்சல்?
ஒருவன் குடித்துவிட்டு கோப்பையை எடுக்க முயன்றிருக்கிறான்.
அதற்குள் பிடித்து விட்டார் கள்!
மைக் என்ன இது?
பார்த்தாயா! அதன் அருகில் கூட செல்ல முடியவில்லை! பாதுகாப்பு பயங்கரம்!
மறுநாள் போட்டி தொடங்கியது. இருவர் கொரில்லாவுடன் சண்டை போட் டார்கள்.
ஆனால் கொரில்லா அவர்களை கீழே தூக்கிப் போட்டு மேலே உட்கார்ந்து கொண்டது.
மைக்! நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். இரு இப்போது வந்து விடுகிறேன்! நீ யாரிடமும் எதுவும் பேச வேண் டாம்!
என்னை ஏன் யாரிடமும் எதுவும் பேச வேண்டாம் என்று சொல்கிறான்!

காட்டுக்குள் போன இருவரும் என்ன ஆனார்கள் என்று தெரிய வில்லையே?
பாஸ்...! ஓமனிடம் இருந்து போன்!
ஓமன்! எங்கிருந்து பேசுகிறாய்!
காட்டில் இருந்துதான்! அவசரமாக உங்கள் உதவி தேவை!
நாங்கள் கோப்பையை கண்டுபிடிதது விட்டோம்!
மைக்கை எங்கே?
அவன் இங்கேதான் இருக்கிறான்!
காட்டுவாசிகளின் நடமாட்டம் அதிகம் இருக்கிறது. யாரும் கேட்டால் என்ன செய்வேன்! ஓமன் வாயைத் திறக்கக்கூடாது என்றானே!
ரெக்ஸ் நேராக மைக்கிடம் வந்து பேச்சுக் கொடுத்தான்.
அலோ...! ஈட்டி எறிதல் போட்டி எங்கே நடக்கிறது?
ஆ...! ஆங்...!
மைக் வாயை திறக்காமலேயே சமாளித்தான்.
அப்பாடி போய் விட்டான்!

ஓமன் வந்து சேர்ந்தான்.
ஓமன்! நீ போனபிறகு என்னிடம் நிறையபேர் பேச்சுக் கொடுத்தார்கள்.
அவர்கள் பேசுவது ஒன்றும் புரியவில்லை!
எல்லாரும் என்னை வேடிக்கை பார்த்துவிட்டுச் செல்கிறார்கள்!
சரி! போகட்டும்! நம்முடைய அடுத்த வேலை?
கோப்பையை எப்போது அபேஸ் பண்ணப் போகிறோம்!
நாளை இரவு!
பாதுகாப்பு தீவிரமாக இருக்கிறது? என்ன செய்வது?
பிறகு சொல் கிறேன்!
ரெக்ஸ் அவர்களை கூர்ந்து கவனித்து வந்தான்.
இன்றைய போட்டி முடிந்ததும் கூட்டத்தோடு கூட்டமாக நாமும் சென்றுவிடலாம்!
ஆகட்டும்!
இவர்கள் இருவரும் அடிக்கடி குசுகுசுவென்று பேசிக்கொள்கி றார்களே! ஏதோ சதி செய்கிறார்கள் என்று நினைக்கிறேன்!
ரெக்சின் மனதில் அவர்களைப் பற்றி கறுப்புப்புள்ளி தோன்றியது.

மறுநாள் போட்டி ஆரம்பமானது. படகு போட்டி நடந்தது.
அடுத்ததாக முதலையுடன் சண்டை.
ஓமன்! இன்று இரவு காரியத்தை முடித்து விடலாம் அல்லவா?
நிச்சயமாக!
என்ன ரெக்ஸ்!
மாமா! இரண்டுபேர் சந்தேகப் படும்படியாக குசுகுசுவென்று பேசிக் கொள்கிறார்கள்!
வெளி ஆள் போலத் தெரிகிறது மாமா? அவன் நடவடிக்கை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது!
அப்படியா?
ரெக்ஸ்! துப்பறிகிற வேலையை விட்டுவிட்டு விளையாட்டுகளை கவனமாகப் பார்!
மாயாவி ரெக்சை எச்சரித்துவிட்டு புறப்பட்டார்.

ஆனால் ரெக்ஸ் கேட்கவில்லை.தொடர்ந்து அவர்களை நோட்டமிட்டான்.
இருவரும் எங்கே போகிறார்கள்?
ஓமன்! ஒரு பொடியன் நம்மை பின்தொடர்கிறான்!
அப்படியா?
நகரில்— தலைவன் கெலிகாப்டர் தளத்துக்கு வந்தான்.
கெலிகாப்டரில் இரவில் பறந்தால் சத்தம் காட்டிக் கொடுத்து விடுமே.
உனக்கு கோப்பை வேண்டுமா? வேண்டாமா?
ஓமன் விமானத்தில் பறந்தால் ஆபத்து என்று சொன்னானே!
பேசாமல் என்னுடன் வா!
காட்டில் ஒலிம்பிக் போட்டி கோலாகலமாக நடந்து கொண்டிருந்தன.
ஓமன்! அந்தப் பொடியனுக்கு நம் திட்டம் தெரிந்திருக்குமா?
பொடியன்தானே! கவலைப்படாதே!

ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை நடந்தது.
கும்...!
ஒருவன் எதிரியை திணறடித்துக் கொண்டிருந் தான்.
அடுத்ததாக இரவு விளை யாட்டுப் போட்டிக்காக பார்வையாளர்கள் காத்திருந்தார்கள்.
ஆனால் மைக்கும் ஒமனும் கோப்பையை தட்டிச் செல்ல நேரம் பார்த்துக் கொண்டிருந் தார்கள்.
மைக்...! நேரம் நெருங்கி விட்டது!
இரு! யாராவது நம்மை பார்க்கிறார்களா என்று பார்க்கிறேன்!
இரவு விளையாட்டு தொடங் கியது. கையில் தீப்பந்தத்து டன் தடை ஓட்டம் நடந்தது.
ரெக்சை எங்கே காணவில்லை! ஒலிம்பிக் போட்டியிலேயே இரவு விளை யாட்டுதான் பார்க்கவேண்டியது. எங்கே போனான்?
மாயாவி ரெக்சை தேடினார்.

ஆனால் ரெக்ஸ், மைக்– ஓமன் இருவரது நடவடிக்கைகளையும் கவனித்துக் கொண்டிருந்தான்
இன்னும் அரை மணி நேரம் போகட்டும்! அப்பொழுதுதான் யாருக்கும் சந்தேகம் வராது!
ஆங்கிலத்தில் பேசிக்கொள்ளுகிறார்கள்! நிச்சயம் வெளிஆட்கள் தான்!
ரெக்ஸ் அவர்களின் உண்மை சொரூபத்தை கண்டுகொண்டான்.
அம்பு எய்தல் போட்டி நடந்தது. அம்புவின் நுணியில் தீப்பந்தம் வைத்து எய்தார்கள்.
ஓமன்! இன்னும் சில நிமிடம்தான் இருக்கிறது!
சரி! நான் சிக்னலுக்கு ஏற்பாடு செய்கிறேன்!
இவர்களைப் பற்றி மாமாவிடம் சொல்ல வேண்டும்!
இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்!
சரியான இடத்துக்கு வந்துவிட்டோம். சிக்னலுக்காக காத்திருக்கிறேன்!
கெலிகாப்டர்– காட்டு மேலே பறந்துகொண்டிருந்தது.

காட்டுவாசிகள் விட்ட அம்புகள் ஒன்றை ஒன்று முந்திச் சென்று கொண்டிருந்தன.
பார்வையாளர்கள் அனைவரும் அம்பின் வேகத்தை கண்டு சிலிர்த்துப் போனார்கள். அப்போதுதான் வானத்தில் இடிமுழக்கம் போல ஓசை கேட்டது.
மைக்! அதோ அவர்கள் வந்துவிட்டார்கள்!
ஆமாம்!
கெலிகாப்டரில்-
கீழே நெருப்பு தெரிகிறதே!
நமக்கு சிக்னல் வரும். காத்திருப்போம்!
இருட்டில் நெருப்பை தாண்டும் போட்டி நடந்துகொண்டிருந்தது.

ஏதோ விமானம் ஒன்று குறுக்கு பாதைக்காக காட்டின் மேலே பறந்து செல்கிறது என்று நினைக்கிறேன்!
மாயாவி வேறு மாதிரி நினைத்தார்.
ஓமன்! அவர்கள் நம்முடைய சிக்னலுக்காக காத்திருக்கிறார்கள்!
உடனே ஓமன் கெலிகாப்டருக்கு சிக்னல் கொடுத்தான். டார்ச் லைட்டை எடுத்து ஒளியை பரப்பினான்.
அதோ சிக்னல் கிடைத்துவிட்டது. இடது பக்கமாக போ!
உடனே கெலிகாப்டரில் இருந்து ஒரு பை கயிற்றில் கட்டி இறககப்பட்டது
சீக்கிரமாக இறக்கு!
பையை ஓமன் பிடித்தான்.

அங்கே அவ்வளவு வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது ஒலிம்பிக் போட்டி களை கட்டியிருந்தது.
மாயாவியின் கோப்பையை ரெக்ஸ் மட்டுமே பரபரப்புடன் பார்வையிட்டு திடுக்கிட்டுக் கொண்டிருந்தான்.
கோப்பையை தூக்கி பைக்குள் போட்டு மூட்டையாக கட்டு!
விரைவாக அந்தப் பக்கம் வா!
ரெக்ஸ் பதட்டத்துடன் குரல் கொடுத்தான்.
ஏய்... கோப்பையை என்னடா செய்கிறீர்கள்?
டேய்... உள்ளே போடு.
கோப்பையை பைக்குள் தூக்கிப் போட்டார்கள்.
ஏய்! அது மாயாவி மாமாவின் தங்கக் கோப்பை நினைவில் இருக்கட்டும்!
உடனே மரத்தில் இருந்து குதித்தான்.

ஏய் ..! அது மாமாவின் கோப்பை
ஏய்....! நில்லுங்கள்!
ரெக்ஸ், கொள்ளையர்களை நோக்கி ஓடிவந்தான்.
மைக் சட்டென்று ரெக்சை பிடித்து அவன் வாயை பொத்தினான்.
பொடிப் பயலே!
விரைவாக மூட்டையை தூக்குங்கள்!
ஓமன் மறுபடியும் கெலிகாப்டருக்கு சிக்னல கொடுத்தான்.
போட்டியில்–
அருமையான ஆட்டம் நடக்கிறது! இதைப் பார்க்காமல் ரெக்ஸ் எங்கே போனான்!
KK
மாயாவி ரெக்சை தேடினார்.
அதேநேரம்–
பொடிப் பயலே! வீணாக உயிரை விட்டு விடாதே'
சீக்கிரம் மூட்டையை மேலே தூக்குங்கள்!
ஏய்....! திருமபும் சிக்னல் வந்துவிட்டது! கயிற்றை மேலே இழு!

எந்தவித தடையும் இல்லாமல் போட்டி அமர்ககளப்பட்டுக் கொண்டிருந்தது
கெலிகாப்டரில்–
உம்... விரைவாக கயிற்றை மேலே இழு! யாரும் பார்த்துவிடப் போகிறார்கள்!
ஆகா.. மேலே போய்விட்டது!
என் மாமாவுக்கு தெரிந்தால் என்ன நடக்கும் தெரியுமா?
போடா! அவர்கள் வருவதற்குள் கோப்பை பல மைல்களுக்கு அப்பால் போய்விடும்!
மைக்கும், ஓமனும் காரியத்தை சாதித்துவிட்ட மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்கள்.
ஆகா...! வெற்றி!

உயரம் தாண்டுதல் போட்டியில் இலங்கோ கிராமத்தினர் வெற்றி பெற்றார்கள்.
அருமையான ஆட்டம்!
அய்யா! எங்களுக்கு வெற்றி
சே! இந்த விளையாட்டைப் பார்க்க ரெக்ஸ் தவறி விட்டானே? மேலே சத்தத்தைக் கேட்டால் கெலிகாப்டர் போலத் தெரிகிறதே!
கெலிகாப்டரில்
ஏய்...! சீக்கிரமாக மூட்டையைப் பிரி! உள்ளே என்ன இருக்கிறது என்று பார்ப்போம்!
கெலிகாப்டரில் கோப்பையை வெளியே எடுத்துப் பார்த்து பிரமித்துப் போனார்கள்.
ஆகா! தங்கம், வைரம் என்று கண்ணைப் பறிக்கின்றதே!
ஓமன்! கூட்டம் வருவதற்குள் நாம் இடத்தை காலி செய்ய வேண்டும!
இவன் நம்மை காட்டி கொடுத்துவிடுவான்! அதனால்.... இவனை...
ஈட்டியை எடுத்து ரெக்சின் கழுத்தில் வைதது அழுத்தினார்கள்.
?

வேண்டாம்! விட்டுவிடு!
இவனை விட்டுச் சென்றால் நம் தலைக்கு ஆபத்து வந்துவிடும்!
மாயாவி வெற்றி பெற்றவுனை பாராட்டினார்!
உயரம் தாண்டுதல் போட்டியில் முதலாவதாக வந்ததற்கு உன்னை பாராட்டுகிறேன்!
ஆகா...! இலங்கோ கிராமத்தினருக்கு வெற்றி!
போட்டியில் இலங்கோ கிராமத்தினர் அதிக மதிப் பெண் பெற்றிருந்தார்கள்.
மைக் இரவுப் போட்டி முடிந்துவிட்டது! கூட்டம் கலைந்து இந்த வழியாகத்தான் வருகிறார்கள்!
இவுனை என்ன செய்வது?
இவனையும் நம்முடன் அழைத்துச் செல்லலாம்! பின்னால் பயன்படுவான்! அதன்பிறகு இவன் கதையை முடித்து விடலாம்!
திடீரென்று ரெக்சுக்கு வீரம் பொத்துக்கொண்டு வந்தது.
மைக்கின் குத்தீட்டியை பிடித்து அவனை மூர்க்கத்தனமாக எட்டி உதைத்தான்.
டேய்...
ஆ...!

அதற்குள் ஓமன், ரெக்ஸ் முகத்தில் ஓங்கி ஓர் குத்து விட்டான்.
ரெக்ஸ் மயங்கிச் சரிந்ததும் அவனை தூக்கிக்கொண்டு இருட்டில் கரைந்து போனார்கள்.
இரவுப் போட்டி முடிந்ததும் கூட்டம் கலைந்து சென்றது.
மாயாவியும் புறப்பட்டார்.
ரெக்ஸ் எங்கே போனான்? இரவில் காட்டுக்குள் அவனுக்கு என்ன வேலை?
கோப்பை இருக்கும் இடத்திற்கு வந்த சிலர் மேடையில் கோப்பை இல்லாத தை கண்டு திடுக்கிட்டுப் போனார்கள்.
?
?
ஆ...! மாயாவியின் கோப்பையை எங்கே காண வில்லை?

தங்கக்கோப்பை மாயமாக மறைந்து விட்டதா?
இல்லை. இரவோடு இரவாக யாரோ கடத்தி யிருக்கிறார்கள்!
மாயாவியின் கோப்பையை காணவில்லை!
செய்தி காட்டுத் தீ போல பரவியது.
மாயாவியின் கோப்பையை காணவில்லை!
மைக்குக்கும், ஓமனுக்கும் செய்தி எட்டியது.
மாயாவியின் தங்கக் கோப்பையை காணவில்லை!
காட்டுவாசிகள் பதட்டத்துடன் தலைவரிடம் ஓடிவந்தார்கள்.
தலைவரே! கோப்பையை காணவில்லை!
அங்கே நில்லுங்கள்! இங்கே மணலில் ஏதாவது தடயம் இருக்கும். அழித்துவி டாதீர்கள்!

உடனே மாயாவி அங்கே வந்தார்.
என்ன தங்கக் கோப்பையை காணோமா?
ஆமாம்! மாயாவியாரே!
ஓமன்! இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்?
இன்னும் அதிக தூரம் செலல வேண்டும்!
மாயாவிக்கு வழியை விடுங்கள்!
மாயாவியாரே! இது உங்கள் கோப்பை என்று தெரிந்தும் திருடிச் சென்று இருக்கிறார்கள்!
இருக்கட்டும்! முதலில் ரெக்ஸ் என்ன ஆனான்?
கால் தடயத்தை வைத்து யார் என்று கண்டு பிடிக்கலாமா?
நல்ல யோசனை தான்! காட்டில் இருபபவர்கள் எடுக்க வாய்ப் பிலலை.
ரெக்ஸ் எங்கே?

மாயாவி கால் தடயங்களை உன்னிப்பாக கவனித்த போது—
யாருடைய துணி இது?
ரிப்பன் போல தெரிகிறதே! இதில் அடையாளக் குறி வேறு இருககிறது!
ஓகான் கிராமத்தை சேர்ந்ததாயிற்றே! அங்கிருந்து வந்தவர்கள் கோப்பையை எடுத்துச் சென்றிருப் பார்களா?
யாரையும் உடனே சந்தேகப்படக் கூடாது!
மாயாவி நடந்தவற்றை நினைத்துப் பார்த்தார்.
அதோ இரண்டு பேர் செல்கிறார்களே அவர்கள் யார்?
ஓகான் கிராமத்தில் இருந்து வந்திருக்கிறார்கள். அதில் ஒருவன் தலைவனுக்கு சொந்தமாம்!
ஓகான் கிராமத் தலைவன் எங்கே இருக்கிறார்? உடனே என்னை பார்க்கச் சொல்லுங்கள்.
ஓகான் கிராமத் தலைவனை மாயாவி காண விரும்புகிறார்!
அவர்கள் இங்கேதான் எங்கேயாவது பதுங்கியிருக்க வேண்டும்?
ரெக்ஸ் கூட ஒருமுறை அவர்களைப் பற்றி என்னிடம் சொன்னான்.

யாரோ வருகிறார்கள்! பேசசுக் குரல் கேட்கிறது?
காதலர்கள் பதுங்கியிருக்கும் இடத்திற்கு மைக்கும் ஓமனும் வந்தார்கள்.
சரி, சரி! இவன் நம்முடனே வரட்டும்! மெதுவாகவே எழுநதிரிக்கட்டும்
அதுதான் நலலது!
விழிததால் நம்மைக் காட்டிக கொடுதது விடுவான!
நாம மாயாவியின கோப்பையை திருடியதை இவனைத் நவிர வேறு எவரும கவனிக்க விலலை!
உஷ ..! ஏதோ சத்தம் கேடகிறதே! யாரும நம்மை பின்தொடர் கிறாாகளா?
உடனே ஓமன சததம வநத திசையில் டாாச் விளககின் ஒளியை செலுததிப் பாாத்தான்.
ஆ . !
காதல் ஜோடி ஒன்று நின்றுகொணடிருந்த

உடனே மைக் துப்பாக்கியை எடுத்தான்.
உங்களுக்கு ஒத்தாசைக்கு நாங்கள் வரட்டுமா?
இது என்ன காதலர்கள் பூங்காவா?
இவர்களைக் கண்டதும் காதலர்கள் தலைதெறிக்க ஓடினார்கள்.
அய்யோ! வாருங்கள் ஓடிவிடலாம்.
ஓமன்! கோப்பையைப் பற்றி பேசிக்கொண்டு வநதோமே அவாகள் கேட்டிருப்பாாகளோ!
அதறகுள் ரெக்சுக்கு மயக்கம் தெளிந்து கணவிழித்துப் பார்ததான.
நம் இரகசியத்தை தெரிந்துகொண்டார்களே அவர்களை மறிப்போமா?
அவசரபபடாதே! அவர்களுக்குத்தான் ஆங்கில மொழி தெரியாதே!
இவனை ஒன்றும் செய்யாதே!
பொடியன் விழித்துவிட்டான் என்ன செய்வது?

நான் ரெக்ஸ். இங்கு இருக்கிறேன். மாயாவியிடம் சொல்லுங்கள்
ரெக்ஸ் காட்டு வாசிகளின் மொழியில் கத்தினான்.
டேய்... கத்தாதே! வாயை மூடு.
இவன் என்ன சொல்லி கத்துகிறான்? புரிய வில்லையே.
ஓமன் உடனே அவன் வாயை பொத்தினான்.
நான் ரெக்ஸ! இங்கிருக்கிறேன்! மாயாவியிடம் சொல்லுங்கள் என்று கத்துகிறான்!
இனி இவனை வைத்துக்கொண்டு அன்னநடை நடக்கக் கூடாது!
ஓட வேண்டியது தான்!
ஏதோ சிறுவனின் குரல் கேட்கிறதே!
நான் ரெக்ஸ்! இங்கு இருக்கிறேன் மாயாவியிடம் சொல்லுங்கள் என்று குரல் வந்தது!
ரெக்ஸ் யார்? ஏன் இப்படி குரல் வருகிறது?
தெரிய வில்லையே! மாயாவியின் பெயரைச் சொல்கிறான்!

மாயாவி! நாங்கள் ரெக்ஸை தேடிப்பிடித்து வருகிறோம்!
கவலைப் படாதீர்கள்!
ரெக்ஸ்-சொன்னதை வைத்துப் பார்த்தால் அவர் கள்தான் கோப்பையை ஹெலிகாப்டர் மூலம் எடுத் துச்சென்றிருக்க வேண்டும்.
மாயாவியின் யூகம் சரியாகத்தான் இருந்தது.
ாட்டில் ரெக்சின் குரலைக் கட்ட காதலர்கள் வந்தார்கள்.
அதோ மாயாவி!
நாம் பார்த்ததை அவரிடம் சொல்வோமா?
வேண்டாம்! அவர் பரபரப்பாக இருக்கிறார்! நான் சொல்ல மாட்டேன்!
ஓகான் கிராமத்து லைவரையும் ரெக்சையும் ர்த்தால் தகவல் தெரிவிக் வும். இது மாயாவியின் டளை என்று செய்தியை றைசாற் ங்கள்!
ஓகான் கிராமத்து தலைவரையும், ரெக்சை யும் பார்த்தால் தகவல் தெரிவிக்கவும்! இது மாயாவியின் கட்டளை.
செய்தி வேகமாக பரவியது.

கேட்டீர்களா? ரெக்சைத்தான் மாயாவி தேடுகிறார்!
நான் அவரிடம் போய் சொல்லமாட்டேன். பயமாக இருக்கிறது!
மாயாவியாரே! ரெக்சை நான் பார்த்தேன்!
!
ரெக்சை நீ பார்த்தாயா?
ஆமாம்! இரண்டு பேர் அவனை தூக்கிச் செல்கிறார்கள்!
நான் ரெக்ஸ்! இங்கே இருக்கிறேன் மாயாவியிடம் சொல்லுங்கள் என்று குரல் கொடுத்தான்
எங்கே?
இங்கிருந்து வடக்கே இரண்டு மைல்களுக்கு அப்பால்!
உடனே மாயாவி குதிரையில் பறந்தார்.
கோப்பையை தூக்கிச் செல்வதை பார்த்தீர்களா?
ரெக்சைத்தான் கொண்டு செல்கிறார்கள்!

ஏய்...!
என்னை
விடுங்கள்!
மரியாதையாக
எங்களுடன் ஓடிவா! இல்லை
குத்திக் கொன்று
விடுவோம்!
!
குத்தீட்டியை வைத்து பயமுறுத்தினார்கள்.
என்ன தைரியமிருந்தால்
ரெக்சை கடத்திச்
செல்வார்கள்!
மாயாவி ரெக்சை
நினைத்தபடியே
குதிரையை
செலுத்தினார்.
என்னை விடுங்கள்!
நான் உங்களுடன்
ஓடிவருகிறேன்!
கிராமத்தில்—
ரெக்சை மட்டும்
கடத்திச் செல்கிறார்களா?
கோபபை இல்லையா?
பையன்
மட்டும்தான்
இருந்தான்!
கோப்பை மட்டும்
கிடைக்காவிட்டால் ஒகான்
கிராமத்தையே
அழித்துவிடுவேன்!
தலைவருக்கு
இரத்தம் கொதித்தது.

இரண்டு மைல் வந்துவிட்டோம்! ரெக்சை காண வில்லையே!
ஓமன்! இன்னும் போக வேண்டுமா?
கொஞ்ச தூரம்தான் இருக்கிறது!
ஓமனும், மைக்கும் ரெக்சை கூட்டிக்கொண்டு மூச்சிரைக்க ஓடினார்கள்.
ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற இலங்கோ கிராமத்தினரிடம் கோப்பையை ஒப்படைக்க வேண்டுமே!
ரெக்சையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்!
ஓர் இடத்தில்—
மூன்று கால் தடங்கள் இருக்கின்றன! இந்த வழியாகத்தான் சென்றிருக்கிறார்கள்!
ஓமன்! மூச்சிரைக்கிறது. என்னால் இனி ஓட முடியாது!
வா! இன்னும் கொஞ்ச தூரம்தான்!


ஆற்றுப் பக்கம் வந்தார்கள். படகு ஒன்று தயாராக இருந்தது.
அதோ படகு!
இனி கவலை இல்லை!

மூவரும் படகுக்கு விரைந்தபொழுது மாயாவி அங்கே வந்தார்.
நில்லுங்கள்!
அய்யா மாமா!

ஆ...! மாயாவியா...?
ஏய்... மரியாதையாக கோப்பையை ஒப்படைத்து விடுங்கள்!
கோப்பையா? யாரிடம் இருக்கிறது! அருகில் வராதே! வந்தால் பொடியன் தலை சுக்கல் சுக்கலாக வெடித்துவிடும்!

அவனை மரியாதையாக: என்னுடன் அனுப்பி வை!
இவன்தான் எங்கள் உயிருக்கு பாதுகாப்பு பெட்டகம்! எப்படி அனுப்புவோம்!
மூவரும் படகில் ஏறினார்கள்.
முகமூடி பேசாமல் போய்விடு! இல்லை இவன் உயிர் இருக்காது!
மாமா! என்னைப் பற்றி கவலைப்படா தீர்கள்!
கோப்பையை விமானத்தில் ஏற்றி அனுபபிவிட்டார்கள்!
டேய் வாயை மூடுடா.
எங்களை பின்தொடராதே! இவன் பிணம் கூட கிடைக்காது'

மைக்! முகமூடியைக் காண வில்லை!
அவர் என்னைக் காப்பாற்றாமல் போக மாட்டார்!
ஓமன்! பேசாமல் இவனை ஆற்றுக்குள் தூக்கி வீசிவிடுவோமா?
வேண்டாம்! நமக்கு தேவைப்படுவான்! ஆற்றில் நீரோட்டம் வேறு அதிகமாக இருக்கிறது!
மாயாவி குறுக்கு வழியில் குதிரையை விரட்டினார்.
என்னிடமே ரெக்சை காட்டி பயமுறுத்து கிறார்களா? இருங்கள் வருகிறேன்!
துடுப்பு இல்லாமலேயே படகு வேகமாக செல்கிறதே!
மாயாவி ஓர் இடத்தில் ஆற்றைக் குறுக்காக கடந்தார்.


ஆற்றைக் கடந்து ஒரு மரத்தின் மீது அமர்ந்து அவர்களை நோட்டமிட்டார்.
இருவரில் ஒருவன் வெள் ளைக்காரன் போலத் தெரிகிறது.
உடம்பில் கரியை பூசி ஆள் மாறாட்டம் செய்திருக்கிறான்!
இன்னொரு இடத்தில் அவர்களை மடக்கிப் பிடி
வேண்டியதுதான்!
ஆற்றின் நீரோட்டத்தில் படகு விரைந்து கொண்டி ருந்தது.
மாயாவியும் குறுக்கு வழியில் விரைந்து அவர்களை மடக்க முயன்றார்
ஓர் இடத்தில்— மாயாவி குதிரையை நிறுத்திவிட்டு மரத்தில் ஏறினார்.
அவர்கள் இதன் வழியாகத்தான் வரவேண்டும்! வரட்டும்!
மாயாவி காத்திருந்தார்.

ஓமன்! படகில் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?
பத்து மைல் சென்றால் நமக்காக கார் காத்திருக்கும்!
பாஸ் திட்டம் போட்டுத்தான் கொள்ளையடித் திருக்கிறார்!
கொள்ளையில் அவர்தான் பெரிய கில்லாடியாச்சே!
அதோ படகு வருகிறது! இனி என் கைவரிசையை காட்ட வேண்டியதுதான்.
என் மாமா எப்படியும் உங்களை மடக்கி பிடித்து விடுவார்!
யார் அந்த முகமூடியா? பார்க்க கோமாளி போல இருக்கிறான்! அவனா பிடிக்க போகிறான்!
ஆமாம்! யார் அந்த முகமூடி?
அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியாது!

திடீரென்று மாயாவி மரத்தில் இருந்து படகில் குதித்தார்.
?
அதோ முகமூடி? இவன் எப்படி இங்கே வந்தான்!
மாயாவி படகில் குதித்த வேகத்தில் மைக்குக்கு ஓங்கி ஓர் குத்து விட்டார்.
கும்...!
ஆ...அம்மா! ஓமன் என்னைக் காப்பாற்று!
ஆனால் ஓமன் மாயாவிக்கு பயந்து ஆற்றுக்குள் குதித்தான்.
அய்யோ... மாயாவியிடம் அகப்படக் கூடாது!
மாமா! என்னை எப்படிக் கண்டுபிடித் தீர்கள்?
கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்! நீ படகை கரைக்கு செலுத்து.
நான் ஓமனை பிடித்து இழுத்து வருகிறேன்!
மாயாவி ஆற்றுக்குள் குதித்தா

!?
ஆ...! என்னை தொடர்ந்து வருகிறாரே!
உடனே ஓமன் கையில் கத்தியை எடுத்தான்.
எங்கே மாயாவியைக் காணவில்லை?
மாயாவி தண்ணீருக்குள் மூழ்கி ஓமனை மடக்கிப் பிடித்தார்.
ரெக்ஸ்! விரைவாக வா!
எப்படி மாமா, இவ்வளவு சீக்கிரம் எங்களை கண்டுபிடித்தீர்கள்?
கொள்ளையர்கள் காட்டுக்குள் எந்த மூலைக்குச் சென்றாலும் பிடித்துவிடுவேன்!
பரவாயில்லை ரெக்ஸ்! உன் தைரியத்தை பாராட்டுகிறேன்!
எல்லாம் உங்களிடம் கற்றுக் கொண்டதுதான் மாமா!

மாயாவி மைக்கையும், ஓமனையும் கட்டிப் போட்டார்.
ஏய்... தங்கக்கோப்பையால் கிராமத்தினரிடையே சண்டை ஏற்படப் போகிறது! மரியாதையாக கொடுத்துவிடு!
கோப்பையா? என்ன உளறுகிறாயா?
காட்டுக்குள்-
ஓகான கிராமத்தினரை ஒருவரையும் உயிரோடு விடக்கூடாது!
தங்கக் கோப்பை எங்களுக்குத் தான் வர வேண்டும்!
இலங்கோ கிராமத்தினர் ஒலிம்பிக் போட்டியில் வென்றுவிட்டார்கள். கோப்பையை அவர்களுக்கு கொடுக்க வேண்டும்!
மரியாதையாக சொல்லிவிடு! எங்கே மறைத்து வைத்திருக்கிறாய்?
ஓமன்! உன் கிராமத்து மக்களை உயிரோடு பார்க்க வேண்டுமானால் கோப்பையை கொடுத்துவிடு!
கோப்பை எங்களிடம் எங்கே இருக்கிறது?

ஓமன்! நான் யாரிடமும் இவ்வளவு பணிவாக நடந்து கொண்டதில்லை.
சொல். கோப்பை எங்கே?
மாமா' பத்து மைல் தள்ளி ஒரு கார் நிற்பதாக இவர்கள் பேசிக் கொண்டார்கள்!
எனக்குத் தெரியாது!
ரெக்ஸை ஏதாவது சொன்னால் உனனை உயிரோடு கொளுத்தி விடுவேன்!
ஆ...!
கசை மைக் அதட்டியது
யாவிக்கு பிடிக்கவில்லை.
என்னை விட்டு விடுங்கள்!
உங்களை சட்டத்தின் பிடியில் ஒப்படைக்க வேண்டும். அதுவரை இங்கேயே இருங்கள்.
போ ஓமன்! உன்னையும் தான்!

மரத்தில் படகை கட்டி இருவரையும் படகில் அமர வைத்துவிட்டு மாயாவி ரெக்சுடன் புறப் பட்டார்.
ரெக்ஸ்! நாம் வருவதற்குள் முதலை இவர்களை கடித்து குதறிவிட்டால்...!
முதலையா?
ஆ...!
இருவரும் வெலவெலத்துப் போனார்கள்
அந்த முகமூடி திரும்பி வருவதற்குள் நாம தப்பிவிடுவோமா?
அது எப்படி முடியும்?
கோப்பையை ஓகான் கிராமத்தினர்தான் திருடிவிட்டார்கள் என்று இலங்கோ கிராமத்தினர் ஆவேசமாக இருப்பார்கள்!
இரண்டு கிராமத்தினருக்குள் குத்து வெட்டு என்று வந்துவிட்டால்... அதற்குள் போயாக வேண்டும்!
பத்து மைல்களுக்கு அப்பால்—
சரி! எனக்கு சேரவேண்டிய பணத்தைக் கொடு!
எவ்வளவு நேரம்தான் மைககுக்கும் ஓமனுக்கும் காத்திருப்பது!
ஹெலிகாப்டரின் பைலட் அவசரப்பட்டான்

நீங்கள் இருந்து அவர்களை கூட்டி வாருங்கள். நான் புறப்படுகிறேன்! என் பணத்தைக் கொடுங்கள்!
பாஸ்! என்ன செய்வது?
எல்லாரும் புறப்பட வேண்டியது தான்!
இங்கே பார்! கெலிகாப்டருக்குரிய வாடகைப் பணத்தை மரியாதையாக கொடு!
வாடகைதானே! இதோ வாங்கிக்கொள்!
ஆ...!
கும்
தலைவன் பைலட்டை மூர்க்கத்தனமாக தாக்கினான்.
அப்போது மாயாவி அங்கு வந்து சேர்ந்தார்.
அதோ அவன் சொன்ன கார்! புறப்பட்டு விட்டதே!
தலைவன் பைலட்டை அடித்துப் போட்டு விட்டு காரில் புறப்பட்டான்.
ஏய்! என்ன நடந்தது?
அதோ அவன் கெலிகாப்டருக்கு வாடகைப் ப்ணம் தராமல் என்னை தாக்கிவிட்டுச் சென்றுவிட்டான்!
நல்லவேளை! நீ இருப்பது எனக்கு நல்லதுதான்!

ரெக்ஸ்! நீ ஓகான் கிராமத்திற்கு சற்றுத் தள்ளி ...வுடன் நில்! ...கிறேன்!
புறப்படு!
உடனே கெலிகாப்டர் புறப்பட்டது.
எங்கே போக வேண்டும்?
நீ உன் பணத்தை அவர்களிடம் வாங்க வேண்டும் அல்லவா?
அவர்கள் காரை ... போ! அவர்கள் ... கோப்பை எதுவும் வைத்திருந்தார்களா?
இருட்டில் நான் சரியாக கவனிக்க வில்லையே!
நீங்கள் ஏன் அவர்களை விரட்டி வருகிறீர்கள்?
பிறகு சொல்கிறேன்!
ஏதேதோ ... பேசிக் கொண்டே வந்தார்கள்!
ஓகோ...!
அதோ கார்! இப்பொழுது என்ன செய்வது?

காரில்—
அனைத்தும் சுத்தமான வைரங்கள்! உலகில் எங்கு தேடினாலும் இது மாதிரி கிடைக்காது!
இது நம் இருவருக்கும்தானே!
இதில் சந்தேகம் என்ன!
பாஸ்! அவர்களை கழட்டிவிட்டது போல என்னையும் கடைசியில் கழட்டி விட்டு விடாதீர்கள்!
மரங்களை டு வெளியே வந்ததும் ழ்வாகப் பற!
அவர்கள எந்திர துப்பாக்கிகள் வைத்து இருக்கிறார்கள்!
நான் சொன்னதைச் செய்!
மாயாவி ஹெலிகாப்டரின் வாசலில் எட்டிப் பார்த்தார்.
ரில்—
வ்வொன்றும் கண்ணைப் பறிக்கின்றதே!
ஆமாம்!
அதற்குள் மாயாவி ஹெலிகாப்டரில் இருந்து கயிறு மூலமாக காருக்கு இறங்கினார்.

சரியான நேரத்தில் மாயாவி காரின் கூரையில் குதித்தார்.
டமார்!
என்ன சத்தம்?
மேலே கெலிகாப்டர் பறக்கிறது!
நாம் வந்த கெலிகாப்டராகத்தான் இருக்கும்!
பைலட் நம் காரின் மீதே இடிக்கிறானா?
மாயாவி கார் மேலிருந்தபடியே சன்னல் வழியாக கையை விட்டு ஓங்கி ஒன்று கொடுத்தார்.
கும்...!
ஆ...!
அடுத்து மாயாவி துப்பாக்கியை எடுத்து காரின் முன் கண்ணாடியை உடைத்தார்.
சிலிங்...!
மாயாவி தலைகீழாக படுத்து துப்பாக்கியை தலைவனின் நெற்றிப் பொட்டில் குறி வைத்தார்.
மரியாதையாக காரை நிறுத்து!
ஆ... நீ

க்ஸ ஓகான் கிராமத்திற்கு
று முன்னால் ஹீரோவுடன்
றுகொண்டிருந்தான்.
மாமா என்னை ங்கேதான் நிற்கச் சொன்னார். ராமத்தின் கதவு ஏன பூட்டப் பட்டிருக்கிறது!
ஏய்... அதோ வருகிறார்கள்!
ரத்தில் இலங்கோ கிராமத்தினர்
அரிவாள், கத்தி, கம்புகளுடன்
ண்டு ஓகான் கிராமத்தை
நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.
மரியாதையாக தங்கக் கோப்பையை கொடுத்துவிடுங்கள்!
அய்யோ! கலவரம் வெடிக்கப் போகிறதே! இந்த நேரம் பார்த்து மாமா இல்லையே!
இல்லை. தங்கக் கோப்பையை நாங்கள் எடுக்கவில்லை.
நீங்கள்தான் எடுத்துச் சென்றீர்கள்!
அங்கே என்ன சத்தம்?

அனைவரும் வானத்தைப் பார்த்தார்கள். அங்கே மாயாவி தங்கக் கோப்பையுடன் வானத்தில் பறந்து வந்துகொண்டிருந்தார்.
அதோ கோப்பை!
மாயாவி வாழக!
மாயாவி வாழ்க!
ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெறற உங்களுக்கு இநதாருங்கள் தங்கக் கோப்பை. கோப்பையை ஓகான் கிராமத்தினர் எடுக்கவில்லை அவர்கள் நிரபராதி!
தவறு எங்கோ நடந்துவிட்டது எங்களை ம்ன்னியுங்கள்!
ஒப்படைக்க வேண்டியதை ஒப்படைத்துவிட்டு மாயாவி புறப்பட்டார்
மாமா கொள்ளையர்களை என்ன செய்தீர்கள் மாமா?
சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டேன் ரெக்ஸ்!
(முடிந்தது)

அடுத்த காமிக்ஸ்

முரட்டுக்காளை
கார்த்
தோன்றும்

கொலைகாரக் கும்பல்

வரிசையாய் இரண்டு மர்மக் கொலைகள்! கொலை செய்தது யார்?
கண்டுபிடிக்க வருகிறார் முரட்டுக்காளை கார்த்!

படிக்கத் தவறாதீர்கள்!

விறுவிறுப்பான படக்கதை!

ஏப்ரல் 1-ந்தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.